# கிறிஸ்தவம் (NRC)

# தரம் - 8

## கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்ட மனிதன் அலகு-1

1. படைப்புக்களில் மிக உன்னத படைப்பு எது?
    - மனிதன்

2. மனிதனை கடவுள் எவ்வாறு படைத்தார்?
    - தம் உருவிலும், தம் சாயலிலும் கடவுளுக்குச் சமமாக மனிதனைக் கடவுள் உருவாக்கினார்.

3. கடவுள் படைப்பில் மனிதனுக்கு உன்னத இடத்தைக் கொடுத்தது ஏன்?
    - மனிதன் மீது காண்பித்த அளவில்லா அன்பினால்

4. மனிதனின் கடமையும், பொறுப்பும் என்ன?
    - எம்மீது எல்லையல்லா அன்பு செய்யும் கடவுளுக்கு நாமும் அளவில்லா அன்பு செய்வது.

5. கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?
    - இறைதந்தையிடம் முழு விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் தரித்திருத்தல்.
    - இறைபடைப்பைப் பாதுகாத்து விருத்தி செய்தல்.
    - எமது வாழ்வின் பெறுமதியை விளங்கிக் கொள்ளல்.
    - இறைகுணாதிசயங்களுடன் வாழ்வை பாதுகாத்தல்.
    - உடல், உள, ஆன்மீக ரீதியில் எங்களுக்கு கிடைத்த சுதந்திரத்தை நல்ல முறையில் பாதுகாத்தல்.
    - இறை அன்பை எமது வாழ்விற்கு முன்மாதிரியாகக் கொண்டு பிறர் மத்தியில் அதை வெளிப்படுத்துவோம்.

6. ஏதேன் தோட்டத்தில் உருவாக்கிய மரங்கள் எவை?
    - வாழ்வின் மரம், நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்.

7. எமது கடமை என்ன?
    - கடவுள் தந்த இயற்கை வளங்களை வீண் விரயம் செய்யாது அவற்றை விருத்தி செய்து பயன்படுத்துவது எமது கடமையும், பொறுப்பும்.

8. வளங்கள் அழிவடைவதற்கான காரணங்கள் என்ன?
    - மனிதனின் சுயநலச் செயற்பாடு.

9. இறை படைப்பானது யாருக்கு சொந்தமானது?
    - அது எல்லாருக்கும் பொதுவானது.

10. மனிதன் எவ்வழியைப் பின்பற்றி வாழவேண்டும்?
    - இருக்கிற வளங்களை நியாயமாக பகிர்ந்து அனைவரும் பயனடைவதற்கான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

## அன்புடன் பாதுகாவல் அலகு-2

1. ஆண்டவர் ஏதேனில் எப்பக்கத்தில் தோட்டம் அமைத்தார்?
    - கிழக்குப் பக்கம்

2. ஆண்டவர் மனிதனுக்கு கொடுத்த அறிவுறுத்தல் என்ன?

♦ தோட்டத்திலருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம் ஆனால் நன்மை,தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே! நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்.

3. "நன்மை, தீமை அறியும் மரம" எதனை அடையாளப்படுத்துகிறது?

♦ இறைவிருப்பத்தை

4. பாம்பு பெண்ணிடம் கூறியது என்ன?

♦ தோட்டத்தின் நடுவில் இருக்கும் மரத்தின் கனியை உண்டால் சாகமாட்டீர்கள் உண்ணும் நாளில் கண்கள் திறக்கப்படும் நீங்கள் கடவுளைப்போல நன்மை, தீமை அறிவீர்கள்.

5. பழத்தை உண்டபோது எவற்றை உணர்ந்து கொண்டார்கள்?

♦ தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்தனர்.

6. எவற்றினால் ஆடைகளைச் செய்தனர்?

♦ அத்தி இலைகளைத் தைத்து ஆடைகளைச் செய்து கொண்டனர்.

7. மனிதன் செய்த தவறு என்ன?

♦ இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்வதற்கு பதிலாக அவருடன் சமமாக வாழ ஆசைப்பட்டான்.

8. ஆதாம் ஆண்டவருக்கு கூறியது என்ன?

♦ என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண் கனியை எனக்கு கொடுத்தாள் நானும் புசித்தேன்.

9. ஏவாள் என்ன கூறினாள்?

♦ பாம்பு என்னை ஏமாற்றியது நானும் உண்டேன்.

10. பாவம் செய்ததனால் மனிதன் இழந்தவை எவை?

♦ இறைசாயலை இழந்தான்.

♦ நிலைவாழ்வை இழந்தான்.

## அளவில்லா இறையன்பு அலகு-3

1. இஸ்ரயேல் மக்கள் எங்கு அடிமைகளாய் இருந்தனர்?

♦ எகிப்தில்

2. எத்தனை வருடங்கள்?

♦ 430 ஆண்டுகள்

3. பார்வோன் அரசன் கலக்கமடைந்தது ஏன்?

♦ இஸ்ரயேல் மக்கள் பல்கிப் பெருகி எகிப்தியரை விட தொகையில் அதிகரித்த படியினால்

4. அரசன் இஸ்ரயேல் மக்களுக்கு கொடுத்த துன்பங்கள் எவை?

♦ கடும் வேலை

♦ கொடுமைப்படுத்தினான்

♦ பிறக்கும் ஆண் குழந்தைகளை கொல்ல கட்டளை பிறப்பித்தான்.

5. மோசே எவ்வாறு காப்பாற்றப்பட்டார்?

♦ பார்வோனின் மகளின் மூலமாக

6. மோசே என்பதன் பொருள்?
   - நீரிலிருந்து மீட்கப்பட்டவர்.

7. மோசேயை ஆண்டவர் தெரிந்ததற்கான காரணம் என்ன?
   - இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க.

8. பாலைவனத்தில் பயணம் செய்த ஆண்டுகள் எத்தனை?
   - 40

9. பாலைவனத்தில் ஆண்டவர் அவர்களை எவ்வாறு வழிநடத்தினார்?
   - பகலில் மேகத்தூணிலும், இரவில் ஒளி காட்ட நெருப்புத்தூணிலும் இருந்தார்.

10. பாலைவனத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவுகள் எவை?
    - மன்னா என்ற அப்பமும், காடையும்

11. மாராவின் கசப்பு நீர் எவ்வாறு சுவை பெற்றது?
    - மரத்துண்டை தண்ணீரில் போட சுவை பெற்றது.

12. மக்கள் கடவுளுக்கு எதிராக முறுமுறுத்த போது அவர் என்ன செய்தார்?
    - மனிதர் மீது கொண்ட அன்பை விட்டு விலகாது அவரின் வல்லமையான காரியங்களை அனுபவிக்கச் செய்து இடைவிடாது பாதுகாத்து வந்தார்.

13. மக்கள் மோசேக்கு எதிராக எவ்வாறு முறுமுறுத்தார்கள்?
    - இறைச்சிப்பாத்திரத்தின் அருகில் அமர்ந்து அப்பம் நிறைவடைந்து எகிப்து நாட்டிலேயே ஆண்டவர் கையால் இறந்திருக்கலாம்

14. மன்னாவின் வடிவம் எவ்வாறானது?
    - கொத்தமல்லி போன்ற அமைப்பும் வெண்ணிறமாயும் தேன் கலந்து ஆக்கிய பணியாரம் போன்று சுவையாகவும் இருந்தது

15. தற் காலத்தில் மனிதன் எப்பாவச் செயலில் சிக்கி உள்ளான்?
    - பணம் ♦ செல்வம் ♦ பெயர் ♦ புகழ் ♦ இலஞ்சம்

16. இச்செயல்களிலிருந்து மீள்வதற்கு மனிதன் செய்ய வேண்டியது?
    - நாம் ஏற்படுத்திக் கொண்ட அடிமை நிலைகளை விட்டு கடவுளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

## இறைவனின் முழுமையான அன்பு அலகு-4

1. மனுவுரு ஏற்று நல்லாயனாக உலகிற்கு வந்தவர் யார்?
   - இயேசு

2. யோவான் 3:16 எமக்கு கற்றுத்தருவது என்ன?
   - தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.

3. ஆடுகளை மேய்க்கும் ஆயனில் கையிலுள்ள உபகரணங்கள் எவை?
   - கோல், நெடுங்கழி

4. இவ்வுபகரணங்கள் எவற்றிற்கு பாவிக்கப்படுகிறது?
   - கோல் : ஆட்டை தாக்கவரும் பிராணிகளிடமிருந்து ஆட்டை காப்பாற்ற
   - நெடுங்கழி : வளைந்த கொக்கி வழிதவறிச் செல்லும் ஆடுகளை மீட்பதற்கு

5. ஆயனின் கடமைகள் எவை?
   - காணமல் போணவற்றை தேடுதல்.
   - நலிந்தவற்றைத் திடப்படுத்தல்.
   - தேவைகளை சரியான முறையில் கவனித்தல்.

6. ஆயனாக வந்த இயேசு எம்மை எவ்வாறு அறிந்து வைத்திருக்கிறார்?
   - ஒவ்வொருவரின் பெயர்களையும் அறிந்து வைத்திருக்கிறார்.
   - தேவைகளையும், பெலவீனங்களையும் அறிந்து வைத்திருக்கிறார்.

7. இயேசு எம்மை அழைத்துச் செல்லும் மேய்ச்சல் நிலம் எது?
   - இறையரசு

8. இயேசு தனது மீட்புப்பணியை யாரிடம் ஒப்படைத்தார்?
   - சீடர்களிடம்

9. நாம் இயேசுவின் மந்தையிலிருந்து விலகிச் செல்வதற்கு காரணம்?
   - சமுதாயத்தில் நிலவும் தீயசக்திகள்.

10. மனிதனுக்கான நிலையானது எது?
   - இறையன்பு

## சீடத்துவ அழைப்பு — அலகு-5

1. இயேசு தனது பணியை சிறப்புடன் செய்ய யாரை நியமித்தார்?
   - பன்னிரு சீடர்களை

2. இறையழைப்பு என்றால் என்ன?
   - இறைபணியில் விசேட பொறுப்பிற்காக இறைவன் தெரிவு செய்தல்.

3. கெனசரேத்து ஏரியில் அழைப்பு பெற்றவர்கள் யார்?
   - பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு

4. கெனசரேத்து ஏரியின் மறு பெயர்கள் எவை?
   - கலிலேயாக்கடல், திபேரியாக்கடல்

5. இயேசு பேதுருவுக்கு கூறியது என்ன?
   - இது முதல் மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்.

6. லேவி எனப்படும் மத்தேயுவை இயேசு எவ்வாறு அழைத்தார்?
   - "என்னை பின் பற்றிவா"

7. இயேசு லேவியின் வீட்டில் உணவருந்தியதைக் கண்டவர்கள் இயேசுவைக் குறித்து குற்றம் சாட்டியபோது அவர் கூறியது?

   - நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை நேர்மையாளர்களையல்ல பாவிகளையே மனமாற அழைக்க வந்தேன்.

8. லேவியை இயேசு எங்கு வைத்து அழைத்தார்?
 - சுங்கச்சாவடியில்

9. இறையழைப்புக்கு அழைக்கப்படுகிறவர்களிடம் காணப்படவேண்டிய குணாதிசயங்கள்?
 - நம்பிக்கை ♦ தாழ்மை ♦ கீழ்ப்படிவு ♦ நேர்மை

10. பன்னிரு சிடர்களுக்கு இயேசு இட்ட பெயர் என்ன?
 - திருத்தூதர்

11. சீடத்துவ அழைப்பைப் பெற பொருத்தமற்றவை?
 - தராதரம், பின்னணி, சமூகநிலை

## பணியின் அடிப்படை அலகு-6

1. இயேசுவின் போதனையில் மிகச்சிறப்பான போதனை?
 - நாசரேத்துப் போதனை

2. நாசரேத்துப் போதனையில் கூறப்பட்டுள்ள விடயங்கள்?
 - ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்தல்
 - சிறைபட்டோர் விடுதலை அடைதல்
 - பார்வை பெற்றோர் பார்வை பெறல்
 - ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடைதல்

## அர்த்தமுள்ள நற்செய்திப்பணி செய்தல் அலகு-7

1. நற்செய்திப்பணியின் பிரதான செய்தி என்ன?
 - விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது.

2. நற்செய்திப்பணியின் சிறப்பான பொறுப்புக்கள்?
 - நற்செய்தி அறிவித்தல்
 - தீய ஆவிகளை விரட்டுதல்
 - நோய்களை குணமாக்குதல்

3. இயேசு சீடர்களை பணிக்கு அனுப்பும் போது வழங்கிய அறிவுறுத்தல்கள்?
 - பொன், வெள்ளி, செப்புக்காசு, காசுப்பை, இரண்டு அங்கிகள், மிதியடிகள் எதையும் எடுத்துச் செல்லவேண்டாம்

4. இயேசு சீடர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என கூறினார்?
 - எளிமையான வாழ்வு
 - முழுமையான இறைவழிகாட்டல்
 - ஏற்றுக் கொள்வோருடன் தங்கியிருத்தல்

5. நற்செய்திப்பணியின் சிக்கல்கள்?
 - ஏற்க மறுப்பார்கள்.
 - சமுதாயத்தினால் பிரச்சினைகள் தோன்றும்.

6. நற்செய்தியை ஏற்க மறுப்பவர்களுக்கு கிடைக்கும் தண்டனை என்ன?
- சமாதான வாழ்த்துக்கிடைக்காது.
- சோதோம், கொமோரா நகருக்கு நடந்ததே நடக்கும்.

## பெண் சீடர்கள் அலகு-8

1. இயேசுவின் பெண் சீடர்கள் யார்?
   - மகதல மரியா,யோவன்னா, சூசன்னா
2. யூத சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு காணப்பட்டது?
   - சமூக தடைகளால் ஒடுக்கப்பட்டு வாழ்ந்தனர்.
3. இயேசு பெண்களை எவ்வாறு நேசித்தார்?
   - பெண்களுக்கு இரக்கம் காட்டினார்.
   - நற்செய்திப்பணி செய்ய வழிகாட்டினார்.
4. அமெரிக்காவில் பிறந்து இலங்கை உடுவில் பாடசாலையில் 40 வருடங்கள் பணியாற்றியவர் யார்?
   - எலிசா எகனிவ்
5. அவரது பட்டப்பெயர் என்ன?
   - ஜெபத்தின் ஆசிரியர்
6. அவரது இறைபணிகள் எவை?
   - திருமறை ஆய்வு, ஜெபம்
7. சிறுவயதிலே இயேசுவைத் தனது மீட்பராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்ட இலங்கைப் பெண் நற்செய்திப் பணியாளர் யார்?
   - ஜொயிஸ் த சில்வா
8. ஜொயிஸ் த சில்வாவுடன் இணைந்து பணியாற்றியவர் யார்?
   - ஏடா பர்னாந்து
9. இவர்கள் இருவருக்கும் சூட்டப்பட்ட பட்டப்பெயர்?
   - வேதாகம அம்மாமார்
10. இயேசுவால் பெண்களுக்கு கிடைத்த பயன்கள்?
    - இயேசுவின் பணியில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தது.

## சீடர்களின் ஆயர் பணி அலகு-9

1. பேதுருவுக்கு கிடைத்த பெரிய பொறுப்பு என்ன?
   - இயேசு தனது ஆயனின் பொறுப்பை பேதுருவிடம் ஒப்படைத்தார்.
2. இயேசு பேதுருவை எவ்வாறு தைரியப்படுத்தினார்?
   - "நீ மனந்திரும்பி உன் சகோதரர்களை உறுதிப்படுத்து"என்று கூறினார்

**3.** பேதுரு இயேசுவை எத்தனை முறை மறுதலித்தான்?
- மூன்று முறை தெரியாது என்று கூறினான்

**4.** உயிர்த்த இயேசுதான் அங்கே நிற்கிறார் என சீடர்கள் ♦ எப்போது அடையாளம் கண்டனர்?
♦ இரவு முழுவதும் மீன் கிடைக்காத போதும் இயேசுவுக்கு கீழ்படிந்து இவர் கூரியபடி வலை வீசிய போது 153 மீன்கள் பிடிபட்டன. அப்போது இயேசு என உணர்ந்தனர்

**5.** இயேசுதான் என்பதை அடையாளம் கண்ட பேதுரு என்ன செய்தார்?
- ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்து இயேசுவிடம் வந்தார்

**6.** உயிர்த்த இயேசுவினால் சீடர்கள் எதனைப் பெற்றுக்கொண்டார்கள்?
- புதிய எதிர்பார்ப்பு
- பெலன்
- தைரியம்
- புதிய பொறுப்பு

**7.** இயேசு திபேரியாக்கடல் அருகில் வந்தது ஏன்?
♦ எதிர்பார்ப்பு குறைந்து போய், சீடர்கள் சோர்வடைந்த சந்தர்ப்பத்தில் அவர்களைக் கைவிடாது தைரியப்படுத்துவதற்காக வந்தார்

**8.** பேதுரு முதல் அழைப்பு பெற்றதும், புதிய பொறுப்பை ஏற்றதும் எவ்விடத்தில்?
- திபேரியாக்கடல் என்னும் கலிலேயாக்கடலருகில்

9. யோவான் 10:11எமக்கு கூறுவது என்ன?
- "நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரையும் கொடுப்பார்

10. எம்மிடத்தில் கடவுள் எவற்றை எதிர்பார்க்கிறார்?
- இறைவார்த்தையில் பெலனடைந்து பிறரையும் போஷித்து பெலப்படுத்த வேண்டும்
- இடைவிடாது ஜெபத்தில் தரித்திரிந்து பிறரை பெலப்படுத்த வேண்டும்
- எப்போதும் கிறிஸ்தவ குணாதிசயங்களை நமது வாழ்வில் முன்மாதிரியாக காண்பிக்க வேண்டும்

## தூய ஆவியின் அருட்கொடைகள் அலகு-10

1. தூய ஆவியாரின் அருட்கொடைகள் எத்தனை?
   - 9

2. அருட்கொடைகள் எமக்கு ஏன் அளிக்கப்பட்டுள்ளன?
   - பிறரை வலுவூட்டவும், திரு அவைகளைப் பலப்படுத்தவும்

3. இக்கொடைகள் எவ்வாறு வழங்கப்பட்டுள்ளன?
   - தூய ஆவியானவரால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக வழங்கப்பட்டுள்ளன

4. தூய ஆவியானவரின் கொடைகளை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?
   - இறைவேண்டல் மூலம்

5. தூய ஆவியானவர் எமக்குத் தந்த கொடைகள் எவை?
   - ஞானம் நிறைந்த சொல்வளம்
   - அறிவு செறிந்த சொல்வளம்
   - தூய ஆவியானவரில் நம்பிக்கை
   - பிணி தீர்க்கும் அருட்கொடை

- வல்ல செயல் செய்யும் ஆற்றல்
- ஆவிக்குரியவற்றை பகுத்தறியும் ஆற்றல்
- இறைவாக்குரைக்கும் ஆற்றல்
- பல வகை மொழிகளைப் பேசும் ஆற்றல்
- பிற மொழிகளை விளக்கும் ஆற்றல்

6. தூய ஆவியின் கொடைகளைப் பெற்ற நீர் எவ்வாறு செயற்படுவீர்?
   - சபைகளை கட்டியெழுப்புவோம்
   - பாவத்தையும், தீய செயல்களையும் எதிர்ப்போம்
   - ஒன்றிணைந்த மக்களை உருவாக்குவோம்
   - இறைவனை கௌரவப்படுத்துவோம்

## தூய ஆவியின் கனிகள் அலகு-11

1. தூய ஆவியின் கனிகள் எவை?
   - அன்பு
   - மகிழ்ச்சி
   - அமைதி
   - பொறுமை
   - பரிவு
   - நன்னயம்
   - நம்பிக்கை
   - கனிவு
   - தன்னடக்கம்

2. தூய ஆவியின் கன்கள் தேவையா?
   - ஆம், எம் ஆன்மீக வாழ்வு நிறைவு பெறவும், அழகானதாக அமையவும், தூய ஆவியின் கனிகள் எமது வாழ்வில் ஒன்று சேர வேண்டும்

3. தூய ஆவியின் கனிகளால் கிடைக்கும் பணிகள்?
   - புதுவாழ்வு வாழ சந்தர்ப்பம் கிடைக்கும்.
   - தவறான சிந்தனைகள், உணர்வுகள், செயல்கள் போன்றவற்றை அகற்றி நல்வாழ்வு வாழும் நிலை உருவாகும்
   - தூய ஆவியானவரின் வழிகாட்டுதலை வாழ்வில் எப்போதும் அனுபவிக்கலாம்
   - பிறர் நலன் கருதி பண்பான வாழ்வை வளர்க்கும் ஆற்றல் கிட்டும்
   - எப்போதும் கிறிஸ்துவின் பிள்ளைகளாக வளரும் பேறு கிடைக்கும்

## தூய ஆவியில் பணி அலகு-12

1. இவ்லின் கார்ணி அம்மையார் எங்கே எப்போது பிறந்தார்?
   - இங்கிலாந்து தேசத்தில் 1869.02.23

2. இலங்கையில் எங்கே தனது தேவையை ஆரம்பித்தார்?
   - தலாவ என்னும் பிரதேசத்தில்

3. அக்காலத்தில் பிரதேச மக்கள் எதிர் கொண்ட துன்பங்கள்?
   - மலேரியா, தொழுநோய் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டார்கள்

4. அவர் பணிக்காக தொடங்கிய சேவைகள் எவை?
   - சிறுவர்களுக்காக ‘‘மகிழ்ச்சி இல்லம்’’
   - வயோதிபர்களுக்காக ‘‘சந்தியா இல்லாம்’’

- மகளிர் பணிக்காக ‘‘தங்கை இல்லம்’’
- 1915 முதலாம் உலக யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்காக ‘‘சமாதான இல்லம்’’

5. அன்றூ குமாரகே ஆயர் அவர்களின் பணிகள் என்ன?
   - மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தினார்.
   - குடும்ப வாழ்வை மேம்படுத்தினார்.
   - நல்ல சமூகத் தொடர்பை விருத்தியடையச் செய்தார்
   - கடவுளின் வழிகாட்டலை தேடுவதற்கும் மக்களை ஈடுபடச் செய்வதற்கு பங்களிப்புச் செய்தார்.

6. குருவானவர் சோமா சிறி குமாரதாஸ் பெரேராவின் பணிகள் எவை?
   - இனங்களின் ஒற்றுமை, கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமை இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் சமாதனத்தைப் போதித்தார்.

7. குரு முதல்வர் டொனால்ட் கனகரட்ணம் ஆற்றிய பணிகள்?
   - இனங்களிடையே ஒற்றுமை, நல்லுறவு.

8. இவரது இல்லம் எங்கிருந்தது?
   - வவுனியாவில்

9. அவரது இல்லத்தை யாரிடம் ஒப்படைத்தார்?
   - மக்களின் பணிக்காக இலங்கைத்திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டத்திடம் கொடுத்தார்

10. அவரது இல்லத்தின் பெயர்?
    - ஒற்றுமையின் இல்லம்

## சமூகப்பணி　　அலகு-13

1. எமது வாழ்விற்கும், சமூகப் பணிக்கும் உதவி புரிபவர் யார்?
   - தூய ஆவியானவர்

2. பிறருக்கு ஒளி கொடுத்து வாழும் பிள்ளைகள் யார்?
   - தூய ஆவியின் வழிகாட்டலைப் பெற்றவர்கள்.

3. தூய ஆவியானவர் எமக்குள் வாசம் செயதால் எமது வாழ்வு எப்படி இருக்கும்?
   - வீட்டிற்கும், பாடசாலைக்கும், திருச்சபைக்கும், அர்ப்பணிப்புடன் தியாக மனதுடன் சேவை செய்பவர்களாக இருப்போம்

4. நாம் தூய ஆவியை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?
   - நம்பிக்கையுடனும், ஜெபத்துடனும் விண்ணக தந்தையிடம் கேட்டல்

5. தூய ஆவியார் எமக்கு எதற்கு பலன் தருவார்?
   - உடல், உள, ஆன்மீக நிறைவு பெற்ற வாழ்வை வாழ பலன் தருவார்

6. சமூகமாக வாழும் போது எவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்?
   - எம்முடன் வாழ்பவர்களின் கருத்துக்கள், மனப்பாங்குகள், கலாசாரங்கள் குறித்து புரிந்துணர்வுடன் வாழ வேண்டும்

7. தூய ஆவியானவரின் செயற்பாட்டை எமது வாழ்வின் மூலம் எவ்வாறு காட்டலாம்?
   - தூய ஆவியின் கனிகளை எம்மிடையே வளர்த்துக் கொள்வதன் மூலமாக காட்டலாம்

8. திருச்சபையில் தூய ஆவியின் பலத்தால் பிறருடன் எவ்வாறு செயற்படலாம்?
- இறை வழிபாட்டில் பக்தியுடன் பங்குபற்றல்
- தூய ஆவியானவரால் பலப்பட்டு வாழ திருச்சபையினருக்காக இறை வேண்டல் செய்தல்
- இறையரசின் வளர்ச்சிக்காக இணைந்து விண்ணப்பம் செய்தல்
- திருச்சபையை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளித்தல்
- பொறுப்புக்களை ஊக்கமாகவும், பொறுப்புடன் நிறைவேற்றல்

## இறையரசின் பெறுமதிகள் அலகு-14

1. இயேசு உலகிற்கு வந்தது ஏன்?
- பாவத்தில் வீழ்ந்த மனிதனை மீட்டெடுக்க

2. எமக்கு ஏற்படும் துன்பங்கள் எவை?
- சரீர துன்பம் ♦ மனத்துன்பம் ♦ ஆன்மீகத்துன்பம்

3. துன்பப்பட்டு சோர்ந்திருந்தவர்களைப் பார்த்து இயேசு என்ன கூறினார்?
♦ பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்

4. இயேசுவினால் ஆறுதல் பெற்ற இருவர் யார்?
- சகேயு ♦ பாவியான பெண்

5. வரிதண்டுபவனாகிய சகேயுவைப் பார்த்து இயேசு என்ன கூறினார்?
- "சகேயு விரைவாய் இரங்கி வாரும் இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்

6. ஆண்டவரின் அழைப்பைப் பெற்ற சகேயுவிடம் காணப்பட்ட மாற்றங்கள் எவை?
♦ "ஆண்டவரே என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்

7. பாவியான பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தவர்கள் யார்?
- மறைநூல் அறிஞரும், பரிசேயரும்

8. அவர்களைப் பார்த்து இயேசு கூறியது என்ன?
- "உங்களில் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மீது கல் எறியட்டும்

9. அங்கு நின்றவர்கள் தீர்ப்பளிக்காமல் சென்ற போது இயேசு அவர்களைப் பார்த்து கூறியது என்ன?
- இனிபாவம் செய்யாதே

10. நாம் எவற்றை வெறுக்க வேண்டும்?
- பாவியை வெறுக்காமல் பாவத்தை மட்டுமே வெறுக்க வேண்டும்

## வல்லமை நிறை வாழ்வு அலகு-15

1. யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தவர்கள் யார்?
   - கைம்பெண்கள்

2. நயீன் ஊர் கைம்பெண்ணின் மகன் இறந்த போது இயேசு என்ன கூறினார்?
   - "இளைஞனே நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திடு"

3. இயேசு யூதப் பெண்களுக்கு மத்தியில் எவ்வாறு செயற்பட்டார்?
   - அவர்கள் எதிர் நோக்கிய சவால்களுக்கு ஆறுதல் வழங்கினார்
   - கைம்பெண்களில் கரிசனை காட்டி அவர்களின் துன்பத்தை நீக்கினார்
   - மரணத்தை கடந்து செயற்படும் ஆண்டவராக காணப்பட்டார்

4. இயேசு எம் வாழ்விற்கு எவ்வாறெல்லாம் நம்பக்கையூட்டுகிறார்?
   - பிரச்சினைகள் மிக்க வாழ்வில் துணிவு கொடுக்கிறார்
   - அனைவருக்கும் ஆறுதல் வழங்குகிறார்
   - துன்ப துயரங்களில் எம்மை விடுவிக்கிறார்
   - எமது பலவீன வாழ்வைப பெலப்படுத்துகிறார்

## இறைவனின் கொடையான சிறுவர்கள் அலகு-16

1. இயேசு சிறுவர்களின் மீது இரக்கம் காட்டிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?
   - வலிப்பு நோயினால் அவதிப்பட்ட சிறுவனை குணமாக்கியமை
   - யவீரின் மகளை உயிர்ப்பித்தல்

2. எந்நோய் ஏற்பட்ட சிறுவனின் தந்தை ஆண்டவரின் பாதத்தண்டை இரங்கும்படி வேண்டினான்?
   - வலிப்பு நோய்

3. எவ்வல்லமையினால் சிறுவன் வலிப்பு நோய்க்கு உட்பட்டான்?
   - தீய ஆவியின் வல்லமையினால்

4. தந்தை சிறுவனை சீடர்களிடம் அளைத்துச் சென்று சுகம் பெற முடியாமல் போனதும், இயேசுவிடம் கூட்டிவந்த காரணம்?
   - இயேசுவிடம் கொண்ட விசுவாசம்.

5. தீய ஆவியை சிறுவனிடமிருந்து நீக்கி சுகத்தைப் பெற காரணமாக அமைவது?
   - சிறுவனிடம் இயேசு காண்பித்த அன்பு
   - தந்தையின் திடமான விசுவாசம்

6. யவீருவின் மகளின் வயது எத்தனை?
   - பன்னிரண்டு

7. யவீரு இயேசுவிடம் வேண்டிய விசுவாச விண்ணப்பம்?
   - மரணத்தருவாயில் இருந்த தனது ஒரே மகளின் சுகத்திற்காக

8. மரித்த பிள்ளையை இயேசு ஏன் உயிர்பித்தார்?
   - பிள்ளையின் மீது இயேசு கொண்ட அன்பு
   - தந்தையின் விசுவாசம்

9. இயேசு தாய்,தந்தையைப் பார்த்து கூறிய வார்த்தை என்ன?
   - இங்கு நடந்தவற்றை யாருக்கும் கூற வேண்டாம்

## அனைவருக்கும் நல்லாசி — அலகு-17

1. இயேசுவின் பணியின் அடிப்படை யாது?
   - மனுக்குலம் அனைத்திற்கும் பூரண விடுதலை அளிப்பதே இயேசுவின் பணியின் அடிப்படையாகும்

2. இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களில் அதிகம் காணக்கூடியவர்கள்?
   - தொழுநோயாளர்

3. இயேசுவிடம் வந்த தொழுநோயாளர் சுகமடைவதற்கு முக்கிய காரணம்?
   - இயேசுவின் மேல் கொண்டுள்ள விசுவாசம்

4. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த துன்பங்கள் எவை?
   - சமூதாயத்திலிருந்து ஒதுக்கப்படடிருந்தனர்
   - அவர்கள் வெளியில் வரும்போது தீட்டு தீட்டு என மணி ஒலித்துக் கொண்டு வரவேண்டும்
   - நகருக்கு வெளியே தனிமைப்படுத்தப்பட்டனர்
   - மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டனர்

5. இயேசு தொழுநோயாளியை சுகப்படுத்திய பின் இதை யாருக்கும் கூறவேண்டாம் என கூறியதற்கான காரணம்?
   - இயேசு புதுமைகளினூடாக மக்களை தம்மிடம் வரவழைத்துக் கொள்வது அவசியமில்லை என்பதே

6. நோயாளி தீட்டு நீங்கி, தூய்மை பெற்றார் என்பதற்கு அடையாளமாக எது காணப்பட்டது?
   - மோசேயின் கட்டளைப்படி காணிக்கை செலுத்தி சான்றை பெற்றுக் கொள்வது

7. யூத சமூகத்தில் மக்கள் மத்தியில் காணப்பட்ட சமூகக் கட்டுப்பாட்டுகளைத் தகர்த்து இயேசு உதவி செய்த சந்தர்ப்பங்கள்?
   - தொழுநோயாளியை தொட்டு சுகப்படுத்தல்
   - ஊமையும், காதுகேளாதவரை தொட்டு சுகப்படுத்தல்

## மனித நேயம் — அலகு-18

1. இலங்கை வாழ் மக்களின் வாழ்வை மேம்படுத்த செயற்பட்டவர்கள்?
   - அருடதந்தை மைக்கல் ரொட்றிகோ
   - சேவக சாமுவேல் செல்வரத்தினம்

2. விவசாயத் தொழில் செய்யும் மக்களின் உள்ளத்தை நன்கு அறிந்து அவர்கள் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்?

- அருட்தந்தை மைக்கல் ரொட்றிகோ

3. அக்காலத்தில் விவசாய மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள் எவை?

- போதிய அளவு நீர் வசதியில்லாமை
- பயிர்ச் செய்கைக்குத் தேவையான அறிவின்மை
- நோய்கள் பரவியமை(மலேரியா போன்ற கொள்ளை நோய்)
- சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டமை(வரட்சி)

4. எந்தக் கிராமத்தில் கிராமவாசியாக கிறிஸ்தவ வாழ்விற்கு ஏற்ப வாழ்ந்தார்?

- பெலவத்தையில் புத்தல அலுகலவிட

5. இலங்கையில் ஆச்சிரமம் அமைக்கப்பட வேண்டும் என நோக்கமாக கொண்டவர்?

- சேவக சாமுவேல் செல்வரத்தினம்.

6. எத்தனையாம் ஆண்டு சுன்னாகம பிரதேசத்தில் ஆச்சிரமம் கட்ட நிலம் வாங்கப்பட்டது?

- 1939

7. ஆரம்பத்தில் இங்கு ஆற்றப்பட்ட பணிகள்?

- வறிய ஆண்பிள்ளைகள் ஆச்சிரமத்தில் தங்கி பாடசாலை செல்லும் சந்தர்ப்பம்
- அவர்களின் செலவுகளை ஆச்சிரமம் ஏற்றது
- சயரோகம்(கசநோய்) நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல்
- பாடல்களைப்பாடி துன்பத்திலிருந்தோரை ஆறுதல் படுத்தினர்

8. எத்தனையாம் ஆண்டு மட்டக்களப்பு கிரானில் ஆச்சிரமம் நிறுவினர்?

- 1958

9. சேவக சாமுவேல் செல்வரத்தினம் எத்தனையாம் ஆண்டு இறையடி எய்தார்?

- 1973

10. நாமும் பிறர் வாழ்வை மேம்படுத்த எவ்வாறு வாழ வேண்டும்?

- எளிமையான வாழ்வு வாழ்தல்
- எமது வாழ்வை அர்ப்பணித்தல்
- உதவி செய்தல்
- அனைவரினதும் உயரச்சிக்காக எமது வாழ்வை அர்ப்பணிப்போம்

## பஞ்சாகங்கள் அலகு-19

1. மனிதனின் மீட்புக்கான இறைவனின் திட்டம் எதில் வெளியிடப்பபடுள்ளது?

- திருவிவிலியம்

2. கிறிஸ்தவர்களின் புனித நூல் எது?

- திருவிவிலியம்

3. திருவிவிலியத்தின் வகைகளையும், எண்ணிக்கையையும் குறிப்பிடுக?

- பழைய ஏற்பாடு-39
- புதிய ஏற்பாடு -27

4. பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களும் எவ்வாறு அழைக்கப்படும்?
- பஞ்சாகமம்

5. பஞ்சாகமத்தில் கூறப்பட்ட விடயங்கள் எவை?
- கடவுள் ஆபிரகாமை அழைத்து, இஸ்ராயேல் மக்கள் மூலமாக உலகத்தை மீட்பதற்காகச் செயற்பட்ட முறையைக் காணலாம்

6. பஞ்சாகமத்தை எபிரேய மொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?
- "தோரா"

7. பஞ்சாகமத்தில் காணப்படும் முதல் 5 நூல்களையும் தருக?
- தொடக்கநூல்
- விடுதலைப்பயணம்
- லேவியர்
- எண்ணிக்கை
- இணைச்சட்டம்

8. இணைச்சட்டத்தில் இஸ்ரயேல் மக்களோடு கடவுள் செயற்பட்ட முறை?
- பத்துக்கட்டளையும் ஏனைய நீதி முறைகளையும் கடைபிடித்தல்
- மோசேயின் மரணம்
- இறைமக்களின் தலைவனாக மோசே நியமிக்கப்படல்

9. பஞ்சாகமத்தில் அடங்கிய நீதிசட்டங்களைக் குறிப்பிடுக?
- பத்துக்கட்டளைகள்(சீனாய் உடன்படிக்கை)
- பத்துக்கட்டளைகளை விட இணைக்கப்பட்ட வேறு நீதிச்சட்டங்கள்

10. இஸ்ரயேலின் நீதிச்சட்டத்தில் காணப்படும் கட்டளைகள் எத்தனை? அவை எவை?
- 10
- என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் வேண்டாம்
- சிலை வழிபாடு செய்ய வேண்டாம்
- உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாக பயன்படுத்த வேண்டாம்
- ஓய்வு நாளை புனிதமாக கடைபிடிக்க வேண்டும்
- உன் தந்தையையும், தாயையும் மதித்து நட
- கொலை செய்யாதே
- விபச்சாரம் செய்யாதே
- களவு செய்யாதே
- பிறருக்கு எதிராக பொய் சான்று சொல்லாதே
- பிறருக்கு உரிய எதையும் கவர்ந்திட விரும்பாதே

## முற்பிதாக்கள் அலகு-20

1. இறைவனின் திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்ல அழைக்கப்பட்டவர்களும், அதற்கு கீழ்படிந்து சிறந்த முறையில் நிறைவு செய்தவர்களும் யாவர்?
- ஆதிப்பிதாக்கள்

2. முற்பிதாக்களின் பெயர்களை குறிப்பிடுக?
- ஆபிரகாம்

- ஈசாக்கு
- யாக்கோபு

3. முற்பிதாக்களின் வாழ்வில் காணப்பட்ட பொதுப்பண்புகள்?
   - தொடர்ச்சியாக கடவுளின் ஆதிக்கத்தில் தங்கியிருத்தல்.
   - கடவுள் அவர்களோடு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ள விசுவாசத்தோடு செயற்படல்

.

4. ஆபிரகாமின் முன்னைய பெயர் என்ன?
   - ஆபிராம்

5. ஆபிரகாம் என்பதன் பொருள்?
   - இனத்தின் தந்தை

6. ஆபிரகாமின் தந்தையின் பெயர் என்ன?
   - தேராகு

7. ஆபிரகாமுக்கு கடவுளின் அழைப்பு எங்கு கிடைத்தது?
   - காரான் நகரில்

8. கடவுள் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எவை?
   - நாட்டின் உரிமை பெறல்
   - பெரிய இனத்தின் தந்தை
   - ஆபிரகாமின் மூலம் அனைத்து மக்களுக்கும் ஆசீர்

9. ஆபிரகாமின் மனைவியின் பெயர் என்ன?
   - சாராள்

10. ஆபிரகாம் கடவுளுக்கு கீழ்படிந்து எவற்றை அர்ப்பணித்தான்?
    - தாய் நாடு
    - உறவினர்
    - தந்தையின் வீடு

11. ஆபிரகாம் எவ்வாறான சவால்களை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டார்?
    - பிள்ளைகள் இல்லாத மனைவியின் மூலம் ஒரு இனத்தை உருவாக்குவேன்
    - அறியாத நாட்டிற்கு செல்லுதல்
    - நாடோடி வாழக்கை வாழ்வதற்கான சந்தர்ப்பம்

12. ஆபிரகாமின் மகனின் பெயர் என்ன?
    - ஈசாக்கு

13. ஈசாக்கு ஆபிரகாமுக்கு எத்தனை வயதில் பிறந்தான்?
    - 100 வயதில்

14. ஈசாக்கு என்பதன் பொருள்?
    - சிரிப்பு

15. ஈசாக்கிடம் காணப்பட்ட பண்புகள்?

    ♦ தாழ்மை ♦ கீழ்ப்படிவு ♦ கடவுளுக்கு கௌரவம் வழங்குதல் ♦ பிறர் தேவைகளை நிறைவேற்றல்

16. ஈசாக்கின் பிள்ளைகளின் பெயர் என்ன?
    - ஏசா
    - யாக்கோபு

17. யாக்கோபு என்பதன் அர்த்தம்?
    - ஏமாற்றுபவன்

18. ஏசாவின் தலைமகனுரிமையை யாக்கோபு எவ்வாறு அபகரித்துக் கொண்டான்?
    - ஏசாவின் பசியின் தன்மையை பயன்படுத்தி.

19. கடவுள் யாக்கோபுடன் எந்த இடத்தில் உடன்படிக்கை செய்தார்?
    - பெத்தேல்

20. யாக்கோபும், ஏசாவும் இணைந்து கொண்ட நிகழ்விலிருந்து எமக்கு கிடைக்கும் வழிகாட்டல்கள்?
    - எம்மால் ஏற்பட்ட தவறுகளை ஏற்றுக்கொள்வதற்கு தயாராகுதல்
    - சகோதர, சகோதரிகளை மதித்தல்
    - தியாக மனப்பான்மையோடு செயற்படல்
    - மன்னிப்பு வழங்கல், மன்னிப்பு பெறுதல்

## வல்லமை நிறைந்த வாழ்வு தெபோரா அலகு-21

1. பழைய ஏற்பாட்டில் நீதித்தலைவியும், இறைவாக்கினராகவும் இருந்த பெண் யார்?
    - தெபோரா

2. கானானிய மன்னன் யார்?
    - யாபி

3. யாப்பினுடைய படைத்தலைவன் யார்?
    - சீசரா

4. சீசராவிடம் எத்தனை இரும்புத் தேர்கள் இருந்தன?
    - தொள்ளாயிரம்

5. இஸ்ரயேலர் எத்தனை வருடம் போரில் தோல்வியடைந்தனர்?
    - 20 வருடம்

6. தெபோராவின் கணவனின் பெயர் என்ன?
    - இலப்பிதோத்

7. தெபோரா எந்த மரத்தின் கீழ் இருந்து மக்களுக்கு தீர்ப்பு வழங்கினாள்?
    - பேரீச்சை மரம்

8. தெபோரா யாருக்கு போரை முன்னின்று நடத்த அறிவுரை வழங்கினாள்?
    - பாராக்குக்கு

9. இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரின் வழிகாட்டலுடன் செயற்பட்டு யாரை தோற்கடித்தான்?
    - சீசராவை

## வல்லமை நிறைந்த வாழ்வு நெகேமியா அலகு-22

1. இஸ்ராயேல் மக்கள் எந்த நாட்டின் அடிமைகளாக இருந்தார்கள்?
   - பாபிலோனியாவில்

2. பாபிலோனிய அடிமைத்தனம் என்றால் என்ன?
   - பாபிலோனியாவை ஆட்சி செய்த நேபுகாத்னேசர் மன்னன் யூத அரசமக்களை பாபிலோனியாவுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வாகும்

3. எந்த அரசன் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் மீண்டும் தமது நாட்டிற்கு செல்வதற்கு அனுமதி கிடைத்தது?
   - ஆளுநரான சைரஸ் மன்னன்

4. தமது நாட்டில் குடியேரிய மக்களுக்கு யாரின் தலைமைத்துவம் கிடைத்தது?
   - செரூப்பாபேல்
   - எஸ்ரா
   - நெகேமியா

5. எருசலேம் மதில்களை கட்டியெழுப்பி எருசலேம் நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவர் யார்?
   - நெகேமியா

6. பாபிலோனிய மன்னனின் அர்த்தகசஸ்தாவின் பானப் பணிவிடைக்காரனாக இருந்த அதிகாரி யார்?
   - நெகேமியா

7. நெகேமியா எத்தனை நாட்களில் மதிலைக்கட்டி முடித்தான்?
   - 52

8. நெகேமியாவின் வெற்றிக்கு காரணமாக அமைந்த 3 விடயங்கள்?
   - அவரது உள்ளத்தில் காணப்பட்ட விசுவாசம்.
   - இறைவனுக்கு கீழ்படிந்தார்
   - முயற்சியுடனும், அர்ப்பணிப்புடனும் உழைத்து தனது செயலை நிறைவேற்றினார்

9. நெகேமியாவுக்கு தனது மக்கள் சமூகத்தால் ஏற்பட்ட சவால்கள்?
   - உணவு பற்றாக்குறை
   - உணவை வாங்க பணமில்லை
   - அடிமையாக செயற்பட நேர்ந்தமை
   - தாங்க முடியாத வரிச்சுமை

10. நெகேமியாவின் வாழ்விலிருந்து பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகள் எவை?
    - தமது எதிரிகளுக்காக இறைவேண்டுதல் செய்தல்
    - எமது அனைத்து செயல்களையும் இறைவனுடன் இணைந்து நிறைவேற்றல்
    - அதிகாரம், செல்வம் என்பவற்றைத் தேவையற்ற வகையில் பாவியாதிருத்தல்

## வல்லமை நிறை வாழ்வு அலகு-23

1. இறைவாக்கினர் என்பதன் வரைவிலக்கணம்?

♦ இறைவனால் அழைப்பு பெற்று அவரது செய்தியை மக்களுக்கு அறிவிப்பவர்கள் இறைவாக்கினர் ஆவர்

2. இறைவாக்கினர் என்பதன் எபிரேய, கிரேக்க பதத்தை தருக?

- எபிரேயம் - நபி
- கிரேக்கம் - ப்ரொபெடெஸ்

3. இதன் பொருளைத் தருக?

- இறைவனுக்காக கதைப்பவன்

4. எரேமியா என்பதன் பொருள்?

- ஆண்டவர் உயர்த்துவார்

5. யாருடைய அழைப்பானது தனது தாயின் வயிற்றில பிறக்கும் முன்னரே திட்டமிப்பட்டது?

- எரேமியாவின்

6. எரேமியாவின் தந்தை யார்?

- இலிக்கியா

7. எரேமியாவின் அழைப்பின் மூலம் எமக்கு கிடைக்கும் வழிகாட்டல்கள்?

- எந்தவொரு வேளையிலும் எமக்கு அழைப்பு கிடைக்கும்
- இளம் வயது முதல் அழைப்பிற்கு கீழ்படிந்து செயற்பட வேண்டும்
- இறைவழிகாட்டலில் விசுவாசத்துடன் இருக்க வேண்டும்

8. எரேமியா கண்ட காட்சிகள் எவை?

- வாதுமை மரக்கிளை
- வடக்கிலிருந்து சாய்ந்திருக்கும் பொங்கும் பாணை

9. எரேமியா இஸ்ரேயலரின் தீயச் செயல் எவையென கூறினார்?

- கொலை ♦ களவு ♦ பிறதெய்வ வழிபாடு
- துன்புறுவோரை ஒதுக்குதல்

10. இறைவாக்கினர் எரேமியாவைப் போன்று நல்ல சமூகத்தை உருவாக்க நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் எவை?

- சமூகத்தின் நன்மை, தீமை செயல்களை அறிந்திருத்தல்
- தீய செயல்களுக்கு எதிராக செயற்படல்
- இறை தொனிக்குக் கீழ்படிந்து இறைவிருப்பை நிறைவேற்றல்
- இறை அபிப்பிராயங்களை இவ்வுலகில் நிறைவேற்றப் பங்களிப்பு செய்தல்